பொ.து.ராஜா தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# 43வது வட்ட கழகம் சார்பில் கல்வெட்டு திறப்பு! நலஉதவிகள் வழங்கல்!

ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு !

சென்னை டிச.29

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43வது வட்ட கழக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட சென்னை மாவட்ட தீரன் மிசா கே.கபடாராஜ், கழக தியாக சுடர்கள் ஜே.ஜான் ஆற்புதநாதன், பொ.துரைராஜ், நினைவாக கழக கொடி ஏற்றி கல்வெட்டு திறந்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (29.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் காசிமேடு சிக்னல் அருகில் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் பொ.து. ராஜா தலைமை வகிக்கிறார்.சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.கே.நகர் தொகுதி பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஜெ. பிரேம் ஆனந்த், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், மா.நாக ராஜன், ப.குமார், ச.தமிழ்செல்வன், ஜே.ஜே.நெல்சன், பா.அருண்குமார், வி.அன்பரசு, ம.நல்லத்தம்பி, கே.குப்பன், எம்.அரிகிருஷ்ணன், ஆர்.ஜெயக்குமார், ஜே.ஜே.பிராங்கிளின், எம்.ஷீலா மோகன், ஏ.வேலுசாமி, ஆர்.சந்தோஷ், கே.ரீட்டா, வெ.சு.சத்தியநாராயணன், சா.திருப்பதி சாமி, என்.பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, வி.ஞானசேகர் தேவகி, நா.தமிழ்வாணன், என்.செல்வம், டி.வசுமதி, ஆர்.பாலசந்தர், டி.இரத்தினராஜ், வி.தமிழரசு, மா.லட்சுமிநாராயணன், ஆர். ஆர்.ஆனந்தன், மு.பாலமுருகன், மு.டில்லிதுரை, எல்.ரமேஷ், மா.ஜெயசந்திரன், எஸ்.கலா, அ.சிவராஜ், எஸ்.முத்தமிழன், வி.சிவா, எம்.அருண்குமார், ஜெ. சிவக்கு மார், வி.விஜேஷ், டி.பன்னீர்செல்வம், ஏ.ஜான்போஸ்கோ, வண்ணை தேவகிஷியம், ஜி.யோகேஸ்வரன், மெய் அன்பு பிரகாஸ், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கழக கொடியேற்றி கல்வெட்டு திறந்து நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.மதிவாணன், இரா. வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், நேதாஜி யு.கணேசன் எம்.சி, டி.வி.முத்து கிருஷ்ணன், வி.வி.ரமேஷ், இர. பொன்இளவரசன், சி.மணிகண்டன், ஏ.டி. மணி, எஸ்.பி.எஸ்.புத்தன், எஸ். கே.இளங்கோ, எ.ரமேஷ்பாபு, ப.சோமசுந்தரமூர்த்தி,, ஆர். மூர்த்தி, எஸ்.எம்.பரசுராமன், ப.ஆ.சண்முகம், பி,சதிஷ்கு மார், தேவிகதிரேசன் எம்.சி, குமாரி நாகராஜ் எம்.சி, எம்.எம்.சாமி, ஆர்.ரமேஷ், ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், வி.முத்து, கே.மோகன், டி.ஆர்.தணிகாசலம், பி.கே.மூர்த்தி, மா.ரூபசந்தர், வி.வடிவேல், பா.நரேஷ்குமார், எஸ்.சம்பத், வானூர் கே.ராஜி, பா.கோதண்டன், எ.சுதேஷ், கே.எம்.சேகர், இரா. மகேந்திரன், கோ.ஹரிராமன், எ.வெங்கடேஷ், டி.கணேசன், என்.பிரேமதாசன், எஸ்.செந்தில் சாமி, சி.சிவக்குமார், பாம்பே லட்ஷமி, டி.லெனின், எஸ். சேகர், க.ராஜேஸ்வரி, எரிமலை பாலு, வெ.சு.பிரபாகரன், கே. பூங்கோதை, பி.சுமன், எம். விமல், ஏ.விந்தன், ஜி.யாதவ் மூர்த்தி, ஏ.ஆரோக்கியராஜ், எம். வேலப்பன், கே.சரவணன், இ.மார்க், ஜி.சரத்குமார், எம். இளம்பரிதி, ஏ.ஜான்சி, ஏ.சகாயராஜ், கே.ஜெயசீலன், டி.ஆனந்தன், ஆர்.ரமேஷ்பாபு, சுதா பாஸ்கர், ஆர்.கந்தன், ஜெ. மெஜிஸ், எஸ்.அரசு, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

டி.ராமமூர்த்தி நன்றி கூறுகிறார்.

டி.கருணாநிதி தலைமையில் – ஈரோடு இறைவன் – ஸ்ரீலேகா சிறப்புரை!

# 107-வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் - பொதுக்கூட்டம்!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ந.இராமலிங்கம் பங்கேற்பு!

சென்னை, டிச.29-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி 107-வது வட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (29 .12 .2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் எம்.எம்.டி.ஏ. தண்ணீர் தொட்டி சாலை சந்திப்பில், 107 வது வட்ட கழக செயலாளர் டி.கருணாநிதி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் ஏ.கே.மூர்த்தி, எஸ். பி.குமார், ஆர்.எஸ்.கில்பட், பானுமதி கிருஷ்ணசாமி, டாக்டர் ஜீவகன் அய்யநாதன் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ந.அதியமான் எம்.சி., இரா. பொன்னுரங்கம், இரா.ரவீந்திர குமார், மகேஷ் ராஜா, வி.எம். சிவா, ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

யோகேஸ்வரி சுந்தரேசன், ஏ.டி.ஏ.யூனுஸ் மைதீன், கே. வாசுதேவன், வி.ஜே.வினோத், எஸ்.சியாமளா செந்தில், டி. உமாதர்மராஜ், கே.எம்.பாலன், ந.இளங்கோவன், எம்.கே. சௌகத் அலி, டி.ராஜ்குமார், சு.வெற்றிச்செல்வன். தி.கதிரவன் ஆகியோர் முன்னிலையில், இ.கன்னியப்பன், டி.தீபா தனசேகர், ஜே.கிரி, சி.அருள்மணி, எஸ்.எம். மொய்தீன், கே.பி.என். ராஜி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., எம். கே.மோகன் எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி. ஆகியோர் நல உதவிகளை வழங்குகின்றனர்.

தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு இறைவன், கழக இளம் பேச்சாளர் திருமதி.ஸ்ரீலேகா, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், தமிழன் பிரசன்னா ஆகியோர் இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றுகின்றனர்.

அரிமா டாக்டர் நா.சந்திரபாபு, சி.சேரன், ஏ.டி.முருகன், கராத்தே ஆனந்தன், ராணி ரவிச்சந்திரன் எம்.சி., வழக்கறிஞர் நன்மாறன், எஸ்.ராம்குமார், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலைச்செல்வன், ஏ.சங்கீதா, கே.எஸ்.அகஸ்டின் பாபு, ஐ. கென்னடி, பா.பிரகாஷ், துபாய் வி.ஆர்.விஜய், வே.தேவேந்திரன், ச.அசோக்குமார், கே குட்டி, முரசொலி ஜெயக்குமரன், சி.கே.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.நடராஜன், ந.அன்பு, வி. தட்சிணாமூர்த்தி, ம.நித்யானந்தம், பி.துரை, ஆர்.அன்பில்பாபு மற்றும் விழா ஒருங்கிணைப்பாளர்கள் கே.எம்.பாண்டியராஜன், கே.வி.வித்யாபதி, என். வி.சண்முகம், மாரியப்பன், கே.அமரேசன், ஆர்.கோதாவரி, எஸ்.ரூபன் ராஜ், ஐ.அனீஸ்தீன், எஸ்.கிஷோர் குமார், ஏ.பி.முருகன், கே.தனலட்சுமி, எச்.பாஸ்கர், க.ரோஷன் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

எஸ்.சபிக் ராஜா, மா.ராமு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு!**
**இன்று (29-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் -**
**நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!**



மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 107வது | டி.கருணாநிதி வட்டக் கழக செயலாளர் | எம்.எம்.டி,ஏ. தண்ணீர் தொட்டிசாலை | ஈரோடு இறைவன் தலைமைக்கழக பேச்சாளர் நா.அருண் தலைமைக் கழக இளம் பேச்சாளர் |
| 2 | 118வது | கோ.யுவராஜ் வட்டக் கழக செயலாளர் | அம்மையப்பன் சந்து இராயப்பேட்டை சென்னை – 600014. | சைதை சாதிக் தலைமைக்கழக பேச்சாளர் செ.ஜோதி தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.பி. முனுசாமி**
**டிசம்பர் 29 (2016)**



கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட தருமபுரி மாவட்ட அவைத்தலைவராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1980ல் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

ஊராட்சி மன்றத் தலைவராகவும், விவசாய வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநராகவும், நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## புதுக்கோட்டை மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

புதுக்கோட்டை, டிச. 29 -

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்கவும், கழக இளைஞர்அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ அறிவிப்பின் படி தி.மு.க. சட்டத்துறை மத்திய மண்டலம் 2 உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள், என். வீரையா, வளர்மதி ஆகியோர் வரவேற்றனர், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யாநாதன் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லபாண்டி ஆகியோர் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். முத்துராஜ் முன்னிலையில், கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைக் கழக வழக்கறிஞர் நாகை மூ.தினேஷ்குமார் சிறப்புரையாற்ற, வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# தேர்தல் ஆணைய நம்பகத்தன்மையின் அடித்தளங்கள் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன!

இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளுக்கான ஜனநாயகத்தையும், மதச்சார்பற்ற ஆட்சி முறையையும், திட்டமிட்டு சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் படிப்படியாக ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையை நிறைவேற்றும் முறையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் நடத்தை விதி 93(2)ல் ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி அவசர கோலத்தில் திருத்தம் செய்துள்ளது. இந்தத் தேர்தல் நடைமுறை விதியில் ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் முறையானதுதானா? எத்தகைய சூழ்நிலையில் இந்தத் திருத்தம் ஒன்றிய அரசால், தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையைக் காரணம்காட்டி மேற்கொள்ளப் பட்டுள்ளது என்ற கேள்விகள் அச்சமும் அதிர்ச்சியும் அடையும் முறையில் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கிறது.

இந்த அச்சத்தையும், அதிர்ச்சியையும் வெளிபடுத்தும் முறையில் “இந்து” ஆங்கில நாளிதழில் 25.12.2024ஆம் தேதிய தலையங்கத்தில் “வெளிப்படைத்தன்மைதான் தேர்தல் நடைமுறையின் நம்பகத் தன்மைக்கான திறவுகோல்” (Transparency is key in maintaining the credibility of the election process) என்ற தலைப்பில் தெளிவுபடுத்தியுள்ளது. தேர்தல் நடத்தை விதி எண் 93(2)(a) திருத்தம் செய்யப்படுவதற்கான காலகட்டம் என்பதும் அதற்கான உள்நோக்கம் என்பதும் ஆழ்ந்த பரிசீலனைக்கும், அனைத்து மக்களின் கவனத்திற்கும் உரியதாகும். அரியானா மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அங்கமான பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

அந்த மாநிலத்தில் ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ் கட்சி வெற்றி வாய்ப்பை இழந்துள்ள நிலையில், பஞ்சாப், அரியானா மாநில உயர்நீதி மன்றத்தில் நடந்து முடிந்த அரியானா மாநில சட்டமன்றத் தேர்தல் நடுநிலையோடும், வெளிப்படைத்தன்மை யோடும், தேர்தல் ஆணையம் மாநிலச் சட்டமன்றத் தேர்தலை நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று காங்கிரஸ்காரர்கள் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பாக தொடரப்பட்ட இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் குற்றச்சாட்டுகளின் உண்மைநிலையை அறியும்நோக்கில் தேர்தல் தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு, தேர்தல் ஆணையத்திடம் கோரியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில்தான் தேர்தல் நடத்தை விதி 93(2)-ல் அவசர கோலத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றம் உயர்நீதிமன்ற ஆணையில் குறிப்பிட்ட ஆவணங்களை அனுப்பிவைத்தால், அதில் சி.சி.டி.வி.யின் படப்பிடிப்பில் பதிவான ஆவணக் குறிப்புகளையும் அனுப்பிடவேண்டிய கட்டாயம் உருவாகும் என்பதை அறிந்த தேர்தல் ஆணையம், இந்த இக்கட்டான சூழ்நிலை யைத் தவிர்ப்பதற்காக வும், ஆம்! குற்றச் சாட்டு களிலிருந்து தப்பிப்பதற்காகவும், இந்தத் தேர்தல் நடத்தை விதித் திருத்தத்தை அவசரமாக ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசும், தங்களின் திட்டமிட்ட உள்நோக்கத்திற்கு, ஆதரவான இந்தத் திருத்தத்தை தேர்தல் நடைமுறை விதியில் அவசரக்கோலத்தில் செய்துள்ளார்கள் என்பது அனுமானம் அல்ல, மாறாக இதுதான் கலப்படமில்லாத உண்மையுமாகும்! இந்த உண்மைகளை வெளிக்கொண்டு வரும் முறையில்தான் “இந்து” ஆங்கில நாளிதழின் 25.12.2024 தேதிய தலையங்கம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



ஒன்றிய அரசு தேர்தல் நடைமுறை விதிகளில் மாற்றம் செய்திருப்பதன் நோக்கத்தையும், திட்டத்தையும் தெளிவாக புரிந்து கொண்ட திராவிட மாடல் ஆட்சியின் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் இந்தத் திருத்தம் தேர்தல் ஆணையத்தினுடைய தேர்தல் நடை முறைகளின் அடிப்படை அம்சங்களான “வெளிப்படைத் தன்மை”, “சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்” மீது நடத்தப்படும் தாக்குதல்கள் எனக் குறிப்பிட்டதோடு, ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைகள் ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது எனத் தெரிவித்தார். எனவே, இந்திய ஒன்றியத்தில் உள்ள ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து, ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சதிகாரப் போக்கினை தடுத்து நிறுத்திட வேண்டுமென தன்னுடைய அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்தத் தேர்தல் விதிமாற்றம் அரியானா மாநில தேர்தலை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொண்டு செய்யப்பட்டது மட்டுமல்லாமல், மராட்டியத்திலும் நடந்த தேர்தல் முடிவுகளும் சட்டத்தின் தாக்குதலுக்கு உள்ளாகுமென கருதிதான், இந்த நடைமுறைவிதி மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள் என்ற பொருள்பட மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஜனநாயக ஆட்சி முறையில் மக்களின் விருப்பங்களை தெரிவிக்கின்ற ஊடகமாக தேர்தல் முறை பயன்படுத்தப்படுகிறது.

எனவே, இந்த தேர்தல் நடைமுறையில் மூன்று அம்சங்களை மிகச் சரியாக தேர்தல் ஆணையம் பின்பற்ற வேண்டும். “வெளிப்படை தன்மை”(Transparency), “சுதந்திரமான நடுநிலை தழுவிய தேர்தல் முறை”(Free and Fair Election Process), கண்டிப்பாக எள்முனையளவுகூட பிசிறின்றி பின்பற்ற வேண்டும். ஆனால், தேர்தல் ஆணையமும், ஒன்றிய அரசும் தேர்தல் நடத்தை விதியில் தங்களின் திட்டமிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் நோக்கில் திருத்தங்களை மேற்கொண்டிருப்பதன் மூலம் அரசியல் சட்ட நிறுவனமான தேர்தல் ஆணையம் தன்னுடைய “நம்பகத் தன்மையை” பெரிதும் இழந்திருக்கிறது என “இந்து” தலையங்கம் சுட்டிக்காட்டுகிறது. (For an institution that is so central to the functioning of democracy, and yet facing an unprecedented challenge to its credibility, less secrecy and more transparency must be the way forward. Sadly, the ECI is falling short on this count, and damaging its own credibility) (Hindu date 25.12.2024, page no:8)

தேர்தல் ஆணையம் என்பது அரசியல் சட்டம் 324 வது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட சுதந்திரமான நிறுவனம். இந்தநிறுவனத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதியும் முன்னர் உறுப்பினர்களாக இருப்பார். ஆனால், தற்பொழுது அந்தக் குழுவில் உச்ச நீதிமன்ற நீதிபதி இடம் பெறுவதில்லை. எனவே, தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் முழுமையான நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவதால், தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை இதுபோன்ற சூழ்நிலையில் கேள்விக்குறியாகிவிடுகிறது. ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி என்பது, ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங் (RSSSS) என்ற மதவாத அமைப்பின் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டது.

இந்திய அரசியல் சட்டத்தின் வழிமுறைகளைப் பின்பற்றி ஆட்சி இயந்திரத்தை இயக்கினால், அவர்கள் விரும்புகிற “இந்துத்துவாக்” கோட்பாட்டின் அடிப்படையிலான இந்துராஷ்டிரத்தை உருவாக்க இயலாது என்பது ஒன்றிய அரசுக்கு நன்றாகவே புரியும் எனவேதான், இந்திய அரசியல் சட்டத்தையும், அரசியல் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டிருக்கும் சுதந்திரமான தேர்தல் ஆணையம் போன்ற நிறுவனங்களில் ஊடுருவி, மக்கள் மத்தியில் ஆணையத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குவது ஆகிய இதுபோன்ற ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் மூலம், இந்திய அரசியல் சட்டத்தின் மீது மக்களிடம் அவநம்பிக்கையை உருவாக்குவது ஆகிய திரைமறைவு நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த திரைமறைவு நடவடிக்கையின் ஓர் வெளிப்பாடுதான், ஒன்றியத்தின் உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களே பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரை உச்சரிப்பதே சிலருக்கு (Fashion) ஆகிவிட்டது. இதற்கு பதில் “கடவுள்” பெயரை அடிக்கடி உச்சரித்தால் “சொர்க்கமாவது கிட்டும்” என்று நாடக மேடைகளில் நடிக்கும் நகைச்சுவை நடிகரைப் போல “நையாண்டி” தொனியில் பேசி யிருக்கிறார்.

உள்துறை அமைச்சரின் இந்த நையாண்டிப் பேச்சுக்கள் காரணமாக நாடு முழுமையும் ஏன்? நாடாளுமன்றத்திலும் உருவான தன்னெழுச்சியான எதிர்ப்பலையைக்கண்டு அதிர்ச்சி அடைந்த ஒன்றிய அரசின் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள், உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் முறைதவறிய பேச்சால் உருவான சரிவைச் சரிக்கட்டுவதற்கு பல்வேறு திசைகளில் முட்டுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இந்த முட்டுக்கொடுக்கும் பணியின் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அவர்கள் “மேஜிக் மாஸ்டர்” அண்ணாமலையாக மாறி, “மாயாஜால” வித்தைகளைக் காண்பிக்க, கால் செருப்பையும், கையில் சவுக்கையும் எடுக்கிறார். அண்ணாமலை அவர்களின் “மாயாஜாலத்தை” பற்றி கவலைப்பட தேவையில்லை. ஆனால், இன்று இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமைக்கும், அரசியல் சட்டத்தின் இறையாண்மைக்கும், இந்திய ஜனநாயகத்திற்கும் ஏற்பட்டுள்ள பேராபத்தை ஒவ்வொரு இந்திய குடிமகனும் ஆழ்ந்து சிந்தித்து எதிர்வினையாற்றத் தயாராக வேண்டும். அதற்கான முழக்கத்தை திராவிட மாடல் ஆட்சியின் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.

எனவே, ஜனநாயகப் பாதுகாப்பு போராட்டத்திற்கு கழகத்தவர் தமிழக முதல்வர் சுட்டுவிரல் நீட்டிடும் திக்குநோக்கி அணிவகுத்திட, அதிலும் குறிப்பாக இளைஞரணியின் ஆற்றல்மிக்க செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் எந்த நோக்கத்திலும் களம்காண பலலட்சக்கணக்கான இளைஞர்கள் தயாராக வேண்டுமென்பதே இந்த நிகழ்வு நமக்குணர்த்தும் பாடமும், படிப்பினையுமாகும்.